# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066944

1. District : மாவட்டம் கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 6/2019 Date: நாள் 04.06.2019

2. (i) Act சட்டம்: Criminal Procedure Code — Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 As Amended by The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 07.12.2018 12.00 to 20.00 hrs — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2018 — Time : நேரம் 1400 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III — Time : நேரம் 1400 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 1 கி.மீ. தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி அரசு பொது மருத்துவமனை, கடலூர்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. பானுகோபன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — (g) Address : முகவரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (முழு பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   (1) M.ரவி, த/பெ. முனுசாமி, CT Scan Radiographer, GH, Cuddalore, (2) S.ராஜாங்கம், த/பெ.சுப்புராயன், Private Security, Unique Delta Force. (3) S.ரேவதி, Emp No. COO 2243, House Keeping, SUMEET Private Security (4) M.ராஜலட்சுமி, Emp No. COO 4290, House keeping, SUMEET Private Security (5) K. ஷகிலா, House keeping, SUMEET Private Security.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

கடலூர் மாவட்டம், கடலூர் அரசு பொது மருத்துவமனையில் 07.12.2018 ம் தேதி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் R.பானுகோபன் என்பவருக்கு கிடைத்த தகவலின்படி அவருக்கு உதவியாக அவரது அழைப்பை ஏற்று காவல் ஆய்வாளராகிய நான் மற்றும் காவலர்களுடன் திடீர் ஆய்வு சோதனை 12.00 மணி முதல் 20.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இதுசம்மந்தமாக 12.12.2018 ம்தேதி R.பானுகோபன், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் திடீர் ஆய்வு சோதனை சம்மந்தமாக புகார் மனு நடவடிக்கைகோரி நிலையத்தில் அளித்திருந்தார். அதன் விபரம் பின்வருமாறு: நாள் : 12.12.2018, அனுப்புநர், R.பானுகோபன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

அ. [signature] 4/6/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

தபால்மூலம் அனுப்பப்பட்டது

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் அ. திருவேங்கடம்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,

அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (முழு பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – அரசு தலைமை பொது மருத்துவமனை, கடலூர் – கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ஒப்படைப்பு – புகார் மனு – நடவடிக்கை எடுத்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக பொறுப்புவகிக்கும் கடலூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் R.பானுகோபன் ஆகிய நான் 07.12.2018–ம் தேதி எனது அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது ஊழல் தடுப்பு நடவடிக்கை சம்மந்தமாக கடலூர் – பண்ருட்டி மெயின் ரோட்டில் அமைந்துள்ள அரசு தலைமை பொது மருத்துவமனையில் பல்வேறு பிரிவுகளில் பொது மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள், நோயாளிகளின் உறவினர்கள், சிகிச்சைக்கு வரும் பொது மக்களிடம் லஞ்சப்பணம் பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நான் எனது அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 07.12.2018 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் S.திருவேங்கடம் அவர்களை சந்தித்து, எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்து, அவரையும், காவல் குழுவினரையும் திடீர் ஆய்வு செய்ய உடன் இருக்குமாறு கேட்டு கொண்டேன். அதன்படி ஆய்வாளர் திருவேங்கடம், பெண் மற்றும் ஆண் காவலர்கள் இடம் பெற்ற காவல் குழுவினருடன் திடீர் ஆய்வில் கலந்து கொண்டார். எனது தலைமையிலான ஆய்வு குழு பகல் சுமார் 12.00 மணிக்கு கடலூர் – பண்ருட்டி சாலையில் தென்புறம் உள்ள கடலூர் அரசு தலைமை பொது மருத்துவனை வளாகத்திற்கு உள்ளே சென்றோம். முதலில் அரசு பொது மருத்துவமனையின் பிரதான நுழைவுவாயிலின் உள்ளே வலது புறத்தில் உள்ள புறநோயாளிகள் (Out Patient) பிரிவில் நோயாளிகளுக்கு பெயர் பதிவு செய்து வழங்கப்படும் அனுமதிசீட்டு பிரிவில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனையின்போது பெயர் பதிவு ஆவணங்களை தவிர முகாந்திரம் இல்லாத பணமோ, பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. இச்சோதனையானது சுமார் 12.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து சுமார் 12.30 மணியளவில் இதே தரை தளத்தில் அமைந்துள்ள

அ.தி 4/6/19

எலும்பு முறிவு சிகிச்சை பிரிவில் (Ortho) திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனையின்போது எலும்பு முறிவு சம்மந்தமாக சிகிச்சைக்கு வந்த நபர்கள் மட்டும் சிகிச்சை மேற்கொண்டிருந்தனர். அந்த அறையில் சோதனையின்போது பெயர் பதிவு ஆவணங்களை தவிர முகாந்திரம் இல்லாத பணமோ, பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. இச்சோதனையானது சுமார் 13.00 மணிக்கு முடிக்கப்பட்டது. தொடர்ந்து இக்கட்டிடத்தின் பின்புறம் மேற்குபுறத்தில் தனியாக அமைந்துள்ள மகப்பேறு சிகிச்சை (Metarnity cum Labour ward) பிரிவில் சுமார் 13.10 மணி முதல் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மகப்பேறு சிகிச்சைப்பிரிவில் நுழைவுவாயிலில் காவல் பணியில் சீருடையில் இருந்த நபரை பற்றி விசாரிக்க தனது பெயர் ராஜாங்கம் என்றும் தான் தனியார் பாதுகாப்பு ஏஜென்சி மூலம் காண்ட்ராக்ட் சம்பளத்தில் பணிபுரிவதாக சொன்னார். உடன் அவரது அடையாள அட்டையை சோதனையிட அதில் S.ராஜாங்கம் த/பெ. சுப்புராயன், நெ.33, மாரியம்மன் கோயில் தெரு, எய்தனூர் என இருந்தது. அவருடைய சீருடை சட்டையில் Unique Delta Force என பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அவரை சோதனையிட அவரிடம் ரூ.300/- (ரூ.10/- x 16, ரூ.20/- x 7) இருந்தது. இப்பணம் பற்றி அவரிடம் விசாரிக்க ஏற்றுக்கொள்ளும்படியான திருப்திகரமான விளக்கத்தை தரவில்லை. மேலும், தனது சொந்த பணம் என அவர் உரிமை கோரவில்லை. எனவே, மகப்பேறு பிரிவில் சிகிச்சையில் இருக்கும் நபர்ளை பார்க்க வரும் பார்வையாளரிடமிருந்து பெறப்பட்ட லஞ்ச பணமாக இருக்கலாம் என முடிவு செய்து கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து பிரசவப்பிரிவில் உதவியாளராக (Housekeeping) பணியிலிருந்த ஒரு பெண்ணிடம் எனது உத்திரவுப்படி ஆய்வுக்குழுவில் இருந்த பெண் காவலர் மூலம் விசாரணை செய்ய தனது பெயர் ரேவதி என்றும் தனது அடையாள அட்டையை காண்பித்தார். அந்த அடையாள அட்டையில் SUMEET, Making it possible என குறிப்பிட்டு S. Revathy, Emp. No. COO 2243, Designation : House Keeping என பதிவாகியிருந்தது. அவரை மேற்சொன்ன பெண்காவலர் அருகில் இருந்த தனி அறையில் சோதனையிட்ட பிறகு அவரிடமிருந்து ரூ.150/- (ரூ.10/- x 11, ரூ.20/- x 2) கைப்பற்றப்பட்டது. இப்பணம் பற்றி அவரிடம் விசாரிக்க ஏற்றுக்கொள்ளும்படியான திருப்திகரமான விளக்கத்தை தரவில்லை.

அ.[signature]
4/6/19

மேலும், இப்பணம் சிகிச்சையில் இருக்கும் நபர்களுக்கு உதவி செய்ததற்காக பெறப்பட்ட லஞ்ச பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து மகப்பேறு பிரிவில் முதல் தலத்தில் பிரசவ தாய்மார்கள் பிரிவில் (Post natal ward) பணியிலிருந்த ஒரு பெண்ணிடம் எனது உத்திரவுப்படி ஆய்வுக்குழுவில் இருந்த பெண் காவலர் மூலம் விசாரணை செய்ய தனது பெயர் ராஜலட்சுமி என்றும் தனது அடையாள அட்டையை காண்பித்தார். அந்த அடையாள அட்டையில் SUMEET, Making it possible என குறிப்பிட்டு M. Rajalakshmi, Emp. No. COO 4290, Designation : House Keeping என பதிவாகியிருந்தது. அவரை மேற்சொன்ன பெண்காவலர் அருகில் இருந்த தனி அறையில் சோதனையிட்ட பிறகு அவரிடமிருந்து ரூ.150/– (ரூ.10/– x 7, ரூ.20/– x 4) கைப்பற்றப்பட்டது. இப்பணம் பற்றி அவரிடம் விசாரிக்க ஏற்றுக்கொள்ளும்படியான திருப்திகரமான விளக்கத்தை அவர் தரவில்லை. மேலும், இப்பணம் சிகிச்சையில் இருக்கும் நபர்களுக்கு உதவி செய்ததற்காக பெறப்பட்ட லஞ்ச பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து மகப்பேறு பிரிவில் சோதனையிட அந்த அறையில் சோதனையின்போது பெயர் பதிவு ஆவனங்களை தவிர முகாந்திரம் இல்லாத பணமோ, பொறுளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. இச்சோதனையானது சுமார் 14.00 மணிக்கு முடிக்கப்பட்டது. தொடர்ந்து மருத்துவமனையின் பிரதான கட்டிடத்தின் நிர்வாக பிரிவு தலத்திற்கு கீழ் உள்ள தரை தலத்தில் கிழக்கு புறத்தில் அமைந்துள்ள இரத்த பரிசோதனை நிலையம் (Dignostcis) பிரிவில் சுமார் 14.15 மணிக்கு சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்பிரிவில் சோதனையில் போது பெயர் பதிவு ஆவனங்களை தவிர முகாந்திரம் இல்லாத பணமோ, பொறுளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. இச்சோதனையானது சுமார் 14.45 மணிக்கு முடிக்கப்பட்டது. தொடர்ந்து சுமார் 14.45 மணிக்கு இரத்த பரிசோதனை நிலையம் அருகிலுள்ள Ultra Sound Scan centre ல் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இம்மையத்தின் வாயிற்படியில் பணியிலிருந்த பெண்ணிடம் எனது உத்திரவுப்படி ஆய்வுக்குழுவில் இருந்த பெண் காவலர் மூலம் விசாரணை செய்ய தனது பெயர் ஷகிலா என்றும் தனது அடையாள அட்டையை காண்பித்தார். அந்த அடையாள அட்டையில் SUMEET, Making it possible என குறிப்பிட்டு K. Shakila Designation : House Keeping என பதிவாகியிருந்தது.

4/6/19

அவரை மேற்சொன்ன பெண்காவலர் அருகில் இருந்த தனி அறையில் சோதனையிட்ட பிறகு அவரிடமிருந்து ரூ.120/– (ரூ.20/- x 6) கைப்பற்றப்பட்டது. இப்பணம் பற்றி அவரிடம் விசாரிக்க ஏற்றுக்கொள்ளும்படியான திருப்திகரமான விளக்கத்தை தரவில்லை. தனது பணம் என்று உரிமை கோரவில்லை. மேலும் சிகிச்சைக்கு வரும் நபர்களிடமிருந்து பெற்ற லஞ்ச பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. இச்சோதனையானது சுமார் 13.15 மணிக்கு முடிக்கப்பட்டது. தொடர்ந்து சுமார் 15.30 மணிக்கு பிரதான கட்டிடத்தின் நிர்வாக பிரிவின் தரை தலத்தில் மையத்தில் அமைந்துள்ள Tamilnadu Medical Services Corportation Limited, CT-Scan Centre ல் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இம்மையத்தில் Computarized Billing Section பணியிலிருந்த பெண்ணிடம் விசாரிக்க தனது பெயர் மாலா என தெரிவித்தார். உடன் அவரது அடையாள அட்டையை சோதனையிட C.Mala, Radiographer, CT Scan centre என Joint Director of Health Services, Cuddalore என்பவரது கையொப்பமிட்டு இருந்தது. அவரது இருக்கையின் வலதுபுற மேஜை டிராயரை சோதனையிட அதில் ரூ.11,800/– இருந்தது. அதைப்பற்றி விவரம் கேட்ட அவர், 07.12.2018 காலை சுமார் 09.40 மணி முதல் 12.00 மணி வரை CT/MRI Scan செய்யவேண்டி வரும் நபர்களிடமிருந்து அரக கட்டணத்தை பெற்றுக்கொண்டமைக்கு இரசீது வழங்கியும் அதற்குரிய மொத்தம் 24 நபர்களிடமிருந்து பெறப்பட்ட அரக பணம் ரூ.11,800/–க்குரிய விளக்கத்தை சொல்லியும், Registration Details விவரத்தை பிரதி எடுத்துகொடுத்தார். இவ்விரண்டையும் சோதனையில் ஒத்து போனதால், மேற்சொன்ன பணம் ரூ.11,800/– அரசு பணம் என கருதி பணியிலிருந்த மாலாவிடம் ஒப்படைத்தும், ஒப்படைத்தமைக்கு அவர் அளித்த பிரதியின் அடியில் ஒப்பம் பெறப்பட்டது. இப்பிரதி விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. அப்போது அங்கு வந்த ஒரு நபர் தனது பெயர் ரவி என்றும் CT Scan centre incharge என சொன்னார். உடன் அவர் அடையாள அட்டையை சோதனையிட C.T. Scan Radiographer, M.Ravi, S/o Munusamy, Bharathidhasan street, Periyakuppam & Post, Cuddalore TK என பதிவாகியிருந்தது. உடன் Billing Section பின்புறத்தில் உள்ள தனி அறையில் அவணங்கள் அடிக்கிவைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த ஒரு டேபிளின் டிராயரை திறந்து பார்க்க ரப்பர்பேன்டு போடப்பட்டு

அ.கி 4/6/19

பணக்கட்டு இருந்தது. அதை மேற்சொன்ன ரவி முன்னிலையில் எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.17,800/– இருந்தது. இதனை பற்றி அவரிடம்விவரம் கேட்க 06.12.2018ம் தேதி CT / MRI Scan centre ல் பதிவாயிருந்த Registration Details படி மொத்தம் 39 நபர்களிடமிருந்து பெறப்பட்ட ரூ.17,800/– உரிய விவரத்தை பிரதி எடுத்துக்கொடுத்தார். அப்பணம் விவரப்படி அரசு பணம் என தெரிய வந்தது. அதனால் மேற்சொன்ன ரூ. 17,800/– அரசு பணம் என கருதி பணியிலிருந்த ரவியிடம் ஒப்படைத்தும், ஒப்படைத்தமைக்கு அவர் அளித்த பிரதியின் அடியில் ஒப்பம் பெறப்பட்டது. இப்பிரதி விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து அதே மேஜையின் மற்றொரு டிராயரில் சோதனையிட ரூபாய் நோட்டுகள் சுருட்டப்பட்டு ஒழுங்கற்ற முறையில் வைக்கப்பட்டிருந்தது. அவற்றை எண்ணிப்பார்க்க ரூ.3,920/–(ரூ50 x 58, ரூ.20 x 1, ரூ.10 x 100) இருந்தது. இதன் விவரம் ரவி, C.T. Scan Radiographer இடம் விவரம் கேட்க, சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேலும், அரசு பணம் என உரிமை கோர அவர் எந்த வித ஆவணங்களையோ, இரசீதுகளையோ காண்பிக்கவில்லை. தொடர்ந்து பணியில் இருந்த மாலா Radiographer, CT Scan centre இடம் விவரம் கேட்க அவரும் உரிய விளக்கம் கூறி, உரிமை கோரவில்லை. மேலும், விசாரணையின்போது போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு, விளக்கமும் கோரப்பட்டது. ஆனால் போதிய அவகாசத்திற்கு பின்னரும் ரவி, Radiographer கண்டுபிடிக்கப்பட்ட பணம் ரூ.3,920/–க்கான எந்தவித விளக்கமும் தந்து உரிமை கோரவில்லை. எனவே, மேற்சொன்ன ரூ.3,920/– இப்பிரிவுக்கு வரும் நபர்களிடமிருந்து பெறப்பட்ட லஞ்சப்பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட ரூ.3,920/– க்கு இப்பிரிவிற்கு தலைமை பொறுப்பு வகிக்கும் ரவி, Radiographer என்பவர் முழு பொறுப்பாவார். மேலும், இப்பிரிவின் வருகை பதிவேடு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. ஆய்வின்போது வருகை பதிவேட்டில் 07.12.2018 என தேதியிட்ட காலத்தில் விசாரணையின்போது உடனிருந்த மேற்சொன்ன மாலா, ரவி ஆகியோர் அவரவர் பெயர்களுக்கு நேரில் சுருக்கொப்பமிட்டிருந்தனர். மேற்சொன்ன வருகைபதிவேடு (1 முதல் 28 பக்கங்கள்) விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. இச்சோதனை இப்பிரிவில் 16.45 மணிக்கு முடிக்கப்பட்டது. தொடர்ந்து சுமார் 17.00 மணி முதல் அரசு பொது மருத்துவமனையின் பிரதான

அ.கி[illegible]
4/6/19

கட்டிடத்தின் இரண்டாவது தலத்தில் இயங்கும் நிர்வாக பிரிவில் (Administrative section) திடீர் ஆய்வு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் பிரிவு கண்காணிப்பாளர் மற்றும் அலுவலர்கள் உதவியுடன் தமிழ்நடு அரசு நல திட்டங்களான 1. Patient Welfare Society, 2. Janani Shishu, Suraksha Karyakaram (JSSK), 3. Janani Suraksha Yojana (JSY), 4. Chief Minister Comprehensive Health Scheme, 5. Amma Arokiya Thittam ஆகியவற்றின் திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது ஆவணங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. இப்பிரிவில் சோதனை 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்சொன்ன திடீர் ஆய்வு சோதனையானது 07.12.2018 பகல் சுமார் 12.00 மணிக்கு தொடங்கி இரவு சுமார் 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,640/– உடன் திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றப்பட்ட (1) 06.12.2018ம் தேதி காலை 08.59 மணி முதல் இரவு 22.54 மணி வரை CT Scan Centre–ல் 39 நபர்களிடம் அரசு கட்டணமாக பெறப்பட்ட பணம் ரூ.17,800/–க்கான விவர பட்டியல் (பக்கம் 1 மற்றும் 2), (2) 07.12.2018ம் தேதி காலை 09.40 மணி முதல் 12.00 மணி வரை CT Scan Centre–ல் 24 நபர்களிடம் அரசு கட்டணமாக பெறப்பட்ட பணம் ரூ.11,800/–க்கான விவர பட்டியல் (பக்கம் 1 மற்றும் 2), (3) CT Scan centre – ல் பராமரிக்கப்படும் ஊழியர்களுக்கான வருகைப்பதிவேடு (பக்கங்கள் 1 முதல் 28 வரை) ஆகியவைகளை இணைத்து திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் கைப்பற்றுதல் மகஜரை இன்று 12.12.2018ம் தேதி 14.00 மணிக்கு கொடுக்கிறேன். எனவே மேற்படி புகார் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (கையொப்பம்) (R.பானுகோபன்).

மேற்சொன்ன புகார் மனுவை கடந்த 12.12.2018 ம்தேதி பெற்று, ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி புகார் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யவேண்டியும், உரிய விசாரணை மேற்கொள்ளவும், உரிய அதிகார அமைப்பு பெற்ற அதிகாரியிடம் முன் அனுமதி பெறவேண்டி இயக்குனரகம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

4/6/19

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு, இயக்குனரகம், சென்னையிலிருந்து கிடைக்கப்பெற்ற உத்திரவுப்படி துணைக்காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர் அலுவலகத்தில் இன்று 04.06.2019 ந்தேதி பகல் 12.15 மணிக்கு, அலுவலகத்தில் சு.திருவேங்கடம், காவல் ஆய்வாளர் ஆகிய நான், கடந்த 12.12.2018 தேதியிட்ட மேற்சொன்ன புகார் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள (1)M.ரவி, த/பெ. முனுசாமி, CT Scan Radiographer, GH, Cuddalore, வீட்டு முகவரி பாரதிதாசன் தெரு, பெரியகுப்பம், கடலூர் மாவட்டம் என்பவர் சட்டபிரிவு 2(C) ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி அரசு பணியாளர் ஆவார் மற்றும் (2) S.ராஜாங்கம், த/பெ.சுப்புராயன், நெ.33, மாரியம்மன் கோயில் தெரு, எய்தனூர், கடலூர் தாலுக்கா, Private Security, Unique Delta Force. (3) S.ரேவதி, Emp No. COO 2243, House Keeping, Outsourcing company employee, SUMEET Private Security (4) M.ராஜலட்சுமி, Emp No. COO 4290, House keeping, SUMEET Private Security (5) K. ஷகிலா, House keeping, SUMEET Private Security ஆகியோர் தனி நபர்கள் (Private individuals) ஆகியோர்களுக்கு எதிராக அளிக்கப்பட்ட புகார் மனுவினை பரிசீலனை செய்து வழக்கு பதிவு செய்தேன்.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட திரு. M.ரவி, த/பெ. முனுசாமி, CT Scan Radiographer, GH, Cuddalore, வீட்டு முகவரி பாரதிதாசன் தெரு, பெரியகுப்பம், கடலூர் மாவட்டம் என்பவர் மருத்துவம் மற்றும் கிராம சுகாதார சேவைகள் இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் பணியாளர் என்பதால், அவருக்கு எதிராக வழக்கு பதிவுசெய்ய, சட்டப்பிரிவு 17A ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி முன் அனுமதி கோரப்பட்டது. அதன்படி இயக்குநர், மருத்துவம் மற்றும் கிராம சுகாதார சேவைகள், சென்னை அவர்கள் Ref. No. 16707/SC1/1/2019-1, dated : 05.04.2019 என்ற கடிதத்தின் மூலம் வழக்கு பதிவு செய்ய முன் அனுமதி பெறப்பட்டது.

சு.[signature] 4/6/19

எனவே மேற்சொன்ன புகாரின் அடிப்படையில் இன்று 04.06.2019 பகல் 12.15 மணிக்கு புகாரில் குற்றம்சாட்டப்பட்டுள்ள (1)M.ரவி, த/பெ. முனுசாமி, CT Scan Radiographer, GH, Cuddalore, வீட்டு முகவரி பாரதிதாசன் தெரு, பெரியகுப்பம், கடலூர் மாவட்டம் என்பவர் சட்டபிரிவு 2(C) ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி அரசு பணியாளர் ஆவார். மற்றும் (2) S.ராஜாங்கம், த/பெ.சுப்புராயன், நெ.33, மாரியம்மன் கோயில் தெரு, எய்தனூர், கடலூர் மாவட்டம், Private Security, Unique Delta Force. (3) S.ரேவதி, Emp No. COO 2243, House Keeping, Outsourcing company employee, SUMEET Private Security (4) M.ராஜலட்சுமி, Emp No. COO 4290, House keeping, SUMEET Private Security (5) K. ஷகிலா, House keeping, SUMEET Private Security ஆகியோர் மீது கடலூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.6/2019, சட்டபிரிவு 102 குற்றவியல் நடைமுறை சட்டம், உடன் இணைந்த சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த முதல் தகவல் அறிக்கையுடன் (1) மேற்சொன்ன அசல் புகார் மனு 12.12.2018 என தேதியிட்டது, (2) அசல் திடீர் ஆய்வு மகசர் 07.12.2018 தேதியிட்டது, (3) கைப்பற்றுதல் மகசரின்படி கைப்பற்றப்பட்ட ரொக்க பணம் ரூ.4,640/– ஐ கருவூலக அலுவலர், மாவட்ட கருவூலக அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர் அலுவலகத்தில் 13.12.2018 ம்தேதி ஒப்படைத்தும், ஒப்படைத்தமைக்கு பெறப்பட்ட ரசீது நகல் ஆகியவைகள் இத்துடன் நீதிமன்ற நடவடிக்கைக்காக வேண்டி தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் கடலூர் அலுவலகத்தில் அனுப்பிவைக்கப்படுகிறது. இதர நகல்கள் உரிய அதிகாரிகளுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.[signature]
4/6/19
அ. திருவேங்கடம்.
காவல் ஆய்வாளர்.
ஊ.த.க பிரிவு
கடலூர்.